

## செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்:

# புதிய நிர்வாகிகள், நாளைய திராவிடத்தின் நம்பிக்கை நாற்றுகள்; அவர்களின் கைகளைப் பிடித்து கழக முன்னோடிகள் வழி நடத்திச் செல்லுங்கள்!

### இளைஞர் அணியின் ஒன்றிய – நகர – அமைப்பாளர்களுக்கு

## துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**காஞ்சிபுரம்,செப்.12-**

**செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதிக்கான கழக இளைஞர் அணியின் கிளை, வார்டு, பாக நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், செங்கல்பட்டில் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர் கழக இளைஞர் அணியில் கொள்கை உறுதியுடன் உழைத்தால், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள், நம்மை எல்லாம் உரிய பொறுப்புக்கு உயர்த்துவார் என்பதை எடுத்துக் கூறி, கழகம் 2026-சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான இடங்களில் வெல்ல பணியாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:**

நேற்று காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, இன்று காலை முதல் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு வருகை தந்து, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வட்டம் மற்றும் கிளை இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களையெல்லாம் ஒரே இடத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன்.

### அறிமுகக் கூட்டம்

முதலில் பொறுப்புக்கு வந்துள்ள உங்கள் அத்தனை பேருக்கும் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு காலையில்தான் முரசொலியில் உங்களின் பெயர்கள் அறிவிப்பாக வெளிவந்தன. காலையில் முரசொலியில் அறிவித்து, மாலையில் அறிமுகக் கூட்டம் நடத்துகிறோம் என்றால், அதுதான் இளைஞர் அணியின் பெருமை. இளைஞர் அணி என்றாலே, வேகமாக இருக்கிறது என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பலமுறை சொல்லி இருக்கிறேன். மீண்டும் அதை வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன். பல்வேறு நிகழ்ச்சிகள். அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகள், இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டாலும், அப்போதெல்லாம் ஏற்படுகின்ற மகிழ்ச்சி உணர்வைவிட, நம் இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இளைஞர் அணி தம்பிமார்கள் உங்களைப் பார்க்கும்போது என்னுடைய குடும்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு என்னுடைய சொந்த சகோதரர்களைப் பார்க்கின்ற உணர்வு எப்போதுமே ஏற்படும். அந்த நெகிழ்ச்சியோடுதான் இன்றைக்கு உங்களை சந்திக்க வந்திருக்கிறேன்.

எத்தனையோ பொறுப்புகள் எனக்கு வந்திருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டுத் துறை அமைச்சர், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் அமைச்சர், ஒரு வருடமாக மாநிலத்தின் துணை முதலமைச்சர் இப்படி எத்தனையோ பெரிய பொறுப்புகள் வந்தாலும், என்னுடைய மனதுக்கு மிகவும் நெருக்கமான பொறுப்பு என்றால், அது நம் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான்.

### இளைஞர் அணி வரலாறு

சிறப்பு வாய்ந்த நம் இளைஞர் அணிக்கு என்று ஒரு வரலாறு உண்டு. அதையெல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இளைஞர் அணியில் நீங்கள் உறுப்பினர் மட்டுமல்ல, பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள்.

'கோபாலபுரம் இளைஞர் தி.மு.க' என்று நம் தலைவர் அவர்கள் விதைத்த விதை, 1980-ஆம் ஆண்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் செடியாக வளர்ந்து, இன்றைக்குப் படிப்படியாக உழைப்பின் மூலம் வளர்ந்து மிகப்பெரிய ஆலமரமாக வளர்ந்து நிற்கிறது நம் இளைஞர் அணி.

இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய பல்வேறு இயக்கங்கள், ஏன் அனைத்து இயக்கங்களும் இளைஞர் அணியைத் துவங்குகிறார்கள். ஆனால், நம் தி.மு.க இளைஞர் அணிக்கு என்று தனிப்பெருமை உண்டு. இந்தியாவிலேயே முதன்முறையாக இளைஞர் அணி என்று ஆரம்பித்ததே திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதை ஆரம்பித்தது நம் கழகத் தலைவர் அவர்கள்தான். நம் இளைஞர் அணிக்கு மட்டும் 40 வருட வரலாறு உண்டு.

கழகத்தில் 25 அணிகள் இருக்கின்றன. இந்த 25 அணிகளில் முதன்மை அணி என்றால், அது இளைஞர் அணி என்று கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்ட அணி நம் இளைஞர் அணி. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த அணியில் நாம் இன்றைக்கு பொறுப்பில் இருப்பது, நமக்கெல்லாம் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய பெருமையாக கருதுகிறேன்.

### கொள்கைப் பேரன்கள்

அண்ணன் அன்பரசன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுப் பேசினார். பொறுப்புக்கு வந்திருப்பவர்களின் 75 சதவிகிதம் பேர்களில், அவர்களின் அப்பா கட்சிக்காரராக இருப்பார், அவர்களின் தாத்தாவும் கட்சியில் இருந்திருப்பார். ஆகவே, கழக குடும்பத்தில் இருந்து 75 சதவிகிதம் பேர் பொறுப்புக்கு வந்திருப்பார்கள். அது மிகப்பெரிய பெருமை என்று அவர் சொன்னார். நீங்கள் நினைத்துக்கொண்டு இருப்பீர்கள். அவர் உங்களைப் பார்த்து சொன்னார் என்று. அவர் என்னையும் பார்த்துத்தான் சொல்லியிருக்கிறார். என் தந்தையும், தாத்தாவும் இந்த கட்சியைச் சேர்ந்தவர்கள்தான், கட்சிக்காக உழைத்தவர்கள்தான். எனவே, உங்களுக்கும் எனக்கும் மிகப்பெரிய வித்தியாசமே இல்லை. நாம் அனைவரும் தந்தை பெரியாரின், பேறறிஞர் அண்ணாவின் கொள்கைப் பேரன்கள் என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.



இங்கு இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள் வருகை தந்துள்ளீர்கள். இன்றைக்கு இளைஞர் அணி இந்த அளவுக்கு கட்டமைப்போடு வளர்ந்திருக்கிறது என்றால், அதற்கு அவர்களின் வழிகாட்டுதலும், ஒத்துழைப்பும் மிக மிக முக்கியம். அவர்களுக்கு இந்த நேரத்தில் இளைஞர் அணிச் செயலாளராக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் பல கட்சிகள் பூத் கமிட்டி அமைப்பதற்கே தடுமாற்றம் அடைந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நம் இளைஞர் அணி இன்றைக்கு பூத்துக்கு ஒரு இளைஞர் அணி பாக அமைப்பாளரை நியமித்து இருக்கிறோம் என்றால், அதுதான் இளைஞர் அணியின் கட்டமைப்பு. இது மிகப்பெரிய சாதனை. புதிதாக பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் காலரை தூக்கி விட்டுக்கொண்டு தைரியமாக, கெத்தா சொல்லலாம். தி.மு.க இளைஞர் அணியில் நான் ஒரு நிர்வாகி என்று பெருமையாகச் சொல்லலாம். யாரோ ஒருவர் கொடுத்த பரிந்துரையால் மட்டும் நீங்கள் இந்தப் பொறுப்புக்கு வரவில்லை.

### குடும்பப் பின்னணி

முதலில் மாவட்டக் கழகத்திலிருந்து பகுதி, வட்ட, செயலாளர்களிடமிருந்து பரிந்துரைக் கடிதத்தை வாங்கினோம். ஆனால், அதை மட்டுமே வைத்து, இந்தப் பொறுப்பு வழங்கப்படவில்லை. இதற்காக அன்பகத்திலிருந்து தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, பரிந்துரை செய்யப்பட்ட அத்தனை நபர்களுக்கும் தனித்தனியாக, நேரடியாக அலைபேசியில் தொடர்புகொண்டு பேசினோம். அதில் உங்களின் பின்னணி, உங்களின் குடும்பப் பின்னணி என்ன, உங்களின் கொள்கை பற்று, கழக உணர்வு, என்னென்ன போராட்டத்தில் கலந்திருக்கிறீர்கள், என்னென்ன நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுள்ளீர்கள், உங்களின் சமூக வலைதள அறிவு என்ன இப்படி அனைத்தையும் சரிபார்த்து இருக்கிறோம்.

இப்படி பல்வேறு கட்டங்களைத் தாண்டி இன்றைக்கு இந்தப் பொறுப்புக்கு வந்திருக்கிறீர்கள். தலைவர் அடிக்கடி சொல்வார். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது பதவி கிடையாது, பொறுப்பு. எனவே, அந்தப் பொறுப்பை உணர்ந்து, பொறுப்போடு செயல்பட வேண்டும் என்று தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார். அதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இங்கு வந்திருக்கின்ற இளைஞர் அணி தம்பிமார்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன். நீங்கள் இளைஞர் அணியில் சரியாக உழைத்து, மக்கள் பணியாற்றினீர்கள் என்றால், நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரத்தை, நம் தலைவர் அவர்கள் சரியான நேரத்தில் அளிப்பார். அதற்கு சிறந்த உதாரணம் உங்கள் எதிரில் இருக்கின்ற இந்த மேடைதான்.

இங்கு இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்கள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக சிறப்பாக பணியாற்றியதால், அவர் உயர்த்தப்பட்டுள்ளார். தன் உழைப்பினால் படிப்படியாக உயர்ந்து இரண்டு முறை அமைச்சராக பொறுப்பு வகித்து, இன்று மாவட்டக் கழகச் செயலாளராக சிறப்பாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்.

சகோதரர் அப்துல் மாலிக் அவர்கள் மாவட்டத் துணை அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டு, தலைவர் அவர்களால் உயர்த்தப்பட்டு, இன்றைக்கு மாநிலத்தின் துணைச் செயலாளராக எனக்கு தோளோடு, தோள் நின்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

### பழைய நினைவுகள்

உங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரர் செல்வம் அவர்களும் இளைஞர் அணியிலிருந்து வந்தவர்கள்தான். இங்கு உட்கார்ந்து இருக்கும்போது அவர்களின் பழைய நினைவுகளைச் சொல்லிக்கொண்டு இருந்தார்கள். ஒன்றிய அமைப்பாளராக இருந்து, பிறகு பொறுப்பு உயர்வு பெற்று மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக நானும், அப்துல் மாலிக்கும் ஒன்றாக வந்தவர்கள் என்று சொன்னார்கள். அப்துல் மாலிக் அவர்களும், செல்வம் அவர்களும் எனக்கு சீனியர்.

இளைஞர் அணியின் இந்த மண்டலத்துக்கான பொறுப்பாளர் சகோதரர் பிரபு கஜேந்திரன் எனக்கு பக்கபலமாக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். உங்களின் மாவட்ட அமைப்பாளர் கோல்டு பிரகாஷ் அவர்கள். இதற்கு முன்பு ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத் துணை அமைப்பாளராக சிறப்பாக செயல்பட்டவர். அவரின் உழைப்பு மட்டும்தான் இன்றைக்கு அவரை மாவட்ட அமைப்பாளராக உயர்த்தி அழகு பார்த்திருக்கிறது.

என் அருமைச் சகோதரர் எம்.கே.டி.கார்த்திக் அவர்கள். இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளராக சிறப்பாகப் பணியாற்றியவர். கார்த்தியின் பணிகளை எல்லாம் பார்த்து, நகர்மன்றத் தலைவராகவும், நகரச் செயலாளராகவும் இன்றைக்கு தலைவரின் அன்பால் உயர்த்தப்பட்டு, மிகச்சிறப்பாக செயலாற்றிக்கொண்டு இருக்கிறார்.

மாவட்டத் துணை அமைப்பாளர் கமலக்கண்ணன் அவர்கள், மறைமலைநகர் இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தவர். அவரின் உழைப்பின் மூலமாக இன்றைக்கு மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளராக உயர்த்தப்பட்டுள்ளார். சகோதரர் மணிகண்டன் செங்கல்பட்டு நகர இளைஞர் அணித் துணை அமைப்பாளராகப் பணியாற்றி, இன்றைக்கு மாவட்டத் துணை அமைப்பாளராக உயர்த்தப்பட்டுள்ளார். இப்படி இந்த காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்களாக வந்தவர்கள் எல்லாம் இளைஞர் அணியிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளார்கள். கழகத்தில் மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களாக, மாண்புமிகு அமைச்சர்களாக, மேயர்களாக, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளாக நம் இளைஞர் அணியில் பணியாற்றிய பலபேர் பொறுப்புகளைப் பெற்றிருக்கிறார்கள். நீங்கள் உழைக்க தயாராக இருந்தால், தலைவர் உங்களை உயர்த்த தயாராக இருக்கிறார். கீழே உட்கார்ந்து இருக்கிற நீங்கள், வெகு விரைவில் மேடைக்கு மேல் வருவீர்கள். அதற்கான தகுதியை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### களத்தில் இறங்குங்கள்

இன்று முரசொலியில் பெயர் வந்துவிட்டது. பொறுப்பு வாங்கிவிட்டோம். நான்கு பிளக்ஸ், பேனர் வைத்தால் போதும், சமூக வலைதளத்தில் இரண்டு பதிவுகள் போட்டால் போதும், விசில் அடித்து, கை தட்டினால் போதும் என்று அதற்காக கூடிய கூட்டம் இந்த கூட்டம் கிடையாது. இது தி.மு.க-வின் கொள்கை கூட்டம். தி.மு.க-வின் எதிர்காலமாக இங்கு உட்கார்ந்து இருக்கிறீர்கள். அதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். களத்தில் இறங்கி, மக்களோடு மக்களாக நிற்க வேண்டும். இளைஞர்களை உங்களின் பக்கம் திருப்ப வேண்டும். யாராவது உங்களைக் குறை சொன்னால் அதற்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டும். நம் அரசு, கட்சியை விமர்சனம் செய்தால், அதற்கு தக்க பதிலடியை நீங்கள் கொடுக்க வேண்டும். இங்கு வந்திருக்கக்கூடிய ஒவ்வொரு நிர்வாகியும் குறைந்தது, 40, 50 வாக்காளர்களை உங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தீர்கள் என்றால், உங்களின் வளர்ச்சியை யாராலும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது.

நீங்கள் எந்தப் பணியை செய்தாலும் அதை மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, செயலாளர்கள் மற்றும் அமைப்பாளர்களிடம் சொல்லிவிட்டு, அவர்களிடம் அனுமதி வாங்கிவிட்டு, ஆலோசனை பெற்று அதை செய்யுங்கள். களத்தில் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறீர்களோ, அதேமாதிரி சமூக வலைதளத்திலும் சிறப்பாக செயல்படுங்கள். அன்பகத்திலிருந்து, உங்களுக்குத் தொடர்ந்து நீங்கள் பதிவு செய்ய வேண்டிய கார்டுகள், செய்திகள் வரும். மற்ற இயக்கங்கள் மாதிரி பொய்செய்திகள் வராது. கழகத்தின் வரலாறு, தினசரி அரசியல், கட்சியின் நிலைபாடு, தலைவரின் அறிக்கைகள் தொடர்ந்து உங்களுக்குப் பகிரப்படும்.

தலைவரின் பக்கங்களைப் பின்தொடருங்கள். தலைவரின் அறிக்கைகளை தினசரி படியுங்கள். அப்போதுதான் எதிர்கட்சிகாரர்களிடம் அரசியல் பேச முடியும். இளைஞர் அணி பக்கத்தை பின்தொடருங்கள். உங்கள் மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர்களின் பக்கங்களைப் பின்தொடருங்கள். தயவுசெய்து காலையில் எழுந்தவுடன் 'முரசொலி' பத்திரிகையைப் படித்துவிடுங்கள்.

### பாசறை பக்கம்

முரசொலியில் கடைசிப் பக்கம் தலைவர் அவர்கள், இளைஞர் அணிக்கு என்று கொடுத்திருக்கிறார். அந்தப் பக்கத்தின் பெயர் பாசறைப் பக்கம். படிப்பதற்கு மிக மிக சுலபமாக இருக்கும். சின்னச் சின்ன துணுக்குகள், அரசின் சாதனைகள், இயக்கத்தின் கொள்கைகள், பழைய புகைப்படங்கள், கார்ட்டூன்கள் இப்படிப் படிப்பதற்கு மிக சுலபமாக இருக்கும்.

இங்கு ஒன்றிய, நகரச் செயலாளர்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். இளைஞர் அணிச் செயலாளராக அவர்களுக்கு எனது அன்பான வேண்டுகோள். புதிய நிர்வாகிகள், நாளைய திராவிடத்தின் நம்பிக்கை நாற்றுகள். இன்றைக்கு புதிதாக பொறுப்புக்கு வந்திருக்கக்கூடிய நம் தம்பிகளுக்கு அத்தனை பேருக்கும் பெரிதாக அரசியல் அனுபவம் இருக்காது. சில பேர் முதல் தலைமுறை அரசியல்வாதியாக வந்திருப்பார்கள். ஒன்றிய, நகரச் செயலாளர்களிடம் நான் வைக்கிற வேண்டுகோள். தயவுசெய்து இளைஞர் அணி தம்பிமார்கள் தெரிந்தோ, தெரியாமலோ சின்ன சின்ன தவறுகள் செய்தார்கள் என்றால், நெறிமுறை தெரியாமல் நடந்துகொண்டார்கள் என்றால் அவர்களை தயவுசெய்து தண்டித்து, புறக்கணித்துவிடாதீர்கள். அவர்களின் கைகளைப் பிடித்து நீங்கள் வழி நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் நகர, பேரூர், வார்டுகள், ஊராட்சி கிளைகள் தோறும் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிவிப்பு விரைவில் வரவிருக்கின்றது. தமிழ்நாடு முழுவதும் அறிவிப்பு வந்துவிட்டது என்றால், இளைஞர் அணியில் நிர்வாகிகள் மட்டும் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பேர் நியமிக்க இருக்கின்றோம். இந்தியாவில் எந்த அணிக்கும் இப்படிப்பட்ட பெருமை கிடையாது. இந்த ஐந்து லட்சம் நிர்வாகிகள் ஒவ்வொருவரும் பத்து வாக்குகளுக்கு நான் பொறுப்பு எடுத்துக்கொள்கிறேன் என்று களத்தில் இறங்கி பணி செய்தார்கள் என்றால், கிட்டத்தட்ட 50 லட்சம் வாக்குகளை இளைஞர் அணி தம்பிமார்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பீர்கள். இந்தத் தேர்தல் மட்டுமல்ல, வரவிருக்கின்ற அனைத்து தேர்தலிலும் தி.மு.க-வின் வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய மையப்புள்ளியாக இருக்கும் நிலைமையை நாம் உருவாக்கலாம்.

### இயக்க வரலாறு

பல இளைஞர்கள் இன்றைக்கு குழப்பத்தில் இருக்கிறார்கள். எந்த இயக்கத்தில் போய் சேர்வது. அதற்கு காரணம், அவர்களுக்கு வரலாறும் தெரியவில்லை. கொள்கையும் தெரியவில்லை. அவர்களுக்கு எல்லாம் நம் இயக்கத்தின் வரலாற்றைச் சொல்லி, நம் இயக்கத்தில் சேர்ப்பதற்கான முயற்சிகளை எடுங்கள். அவர்களிடம் நம் கழகத்தின் சாதனைகள், நம் கழகத்தின் வரலாறைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகள் பவள விழாவை நிறைவு செய்திருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் 75 ஆண்டுகளை கடந்து வெற்றிநடைப்போட்டுக்கொண்டு இருக்கிறது. மொழிக்காக உயிர் தியாகத்தைக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம். மாநில உரிமைகளுக்கான உயிர்களைக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம். இவற்றையெல்லாம் அந்த இளைஞர்களுக்குப் புரியவையுங்கள்.

### கலைஞர் நூற்றாண்டு நூலகம்

இன்றைக்கு இளைஞர் அணி சார்பாக, களத்தில் மட்டுமல்ல கருத்தியல் ரீதியாகவும் பல பணிகளை நாம் செய்துகொண்டு இருக்கிறோம். தமிழ்நாட்டில் இருக்கின்ற 234 தொகுதியிலும் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தைத் திறக்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் உத்தவிட்டார்கள். அனைத்து அமைப்பாளர்களும் களத்தில் இறங்கி, 100-க்கும் அதிகமான கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை, நாம் தமிழ்நாடு முழுவதும் திறந்திருக்கிறோம்.

சிறந்த இளம் 100 பேச்சாளர்களை, பேச்சுப் போட்டி நடத்தி இளைஞர் அணி கொடுக்க வேண்டும் என்றுச் சொன்னார்கள். தமிழ்நாடு முழுவதும் இளைஞர் அணி தம்பிமார்கள் பேச்சுப் போட்டி நடத்தி, இன்றைக்கு 100 இல்லை 200 இளம் பேச்சாளர்களைத் தேர்வு செய்து தலைமைக்கழகத்திடம் ஒப்படைத்திருக்கிறோம். அந்த 200 இளம் பேச்சாளர்களும் இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து சிறப்பாகப் பேசி வருகிறார்கள்.

இளைஞர் அணி சார்பாக, முத்தமிழறிஞர் பதிப்பகம் என்று ஒரு புதிய பப்ளிகேஷன் ஆரம்பித்திருக்கிறோம். இதன் வாயிலாக 25 நூல்களை நாம் வெளியிட்டிருக்கிறோம்.

வருங்கால பத்திரிக்கையாளர்களை உருவாக்க வேண்டும் என்று இளைஞர் அணி சார்பாக, கலைஞர் மாணவப் பத்திரிக்கையாளர் திட்டத்தை ஆரம்பித்து இருக்கிறோம். இந்தப் பணிகளை எல்லாம் இப்போது இருக்கின்ற இளைஞர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். பொதுமக்களிடம் இந்தப் பணிகளை எடுத்துச் சொல்லுங்கள்.

### ஒரே ஒப்பற்ற தலைவர்

நம்மிடம் கொள்கைகள் இருக்கின்றன. சாதனைகளின் வரலாறு இருக்கிறது. இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களை ஒட்டுமொத்த இந்தியாவில் இருக்கும் அனைவரும் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள். நம் வளர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடியாமல்தான் பா.ஜ.க-வும், அ.தி.மு.க-வும் பல்வேறு வகையில் நமக்கு தொல்லைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் எதிர்த்து, குரல் கொடுக்கக்கூடிய இந்தியாவிலேயே ஒரே ஒப்பற்ற தலைவர் நம் தலைவர் என்பதை இன்று மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பில், 2 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களை கழகத்தில் சேர்த்துள்ளோம். பல மாவட்டச் செயலாளர்கள் தொலைபேசியிலும், நேரிலும் என்னை வாழ்த்தினார்கள். இளைஞர் அணி தம்பிமார்கள் களத்தில் இறங்கி, மிகச்சிறப்பாக அந்தப் பணிகளை மேற்கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதற்கு இந்த நேரத்தில் இளைஞர் அணி தம்பிமார்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இளைஞர் அணி தம்பிமார்கள் ஒன்றை மட்டும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இதை மக்களிடம் தொடர்ந்து பேசுங்கள். மீண்டும் ஒருமுறை பா.ஜ.க-வின் அடிமையாக இருக்கின்ற அ.தி.மு.க ஆட்சி வந்தது என்றால், தமிழ்நாட்டிற்குள் தொகுதி மறுவரையறை வந்து, 39 நாடாளுமன்றத் தொகுதிகளை 32 தொகுதிகளாகக் குறைத்துவிடுவார்கள். தமிழ்நாட்டுக்குள் தேசிய கல்விக்கொள்கை வரும், தேசிய கல்விக்கொள்கை மூலமாக மீண்டும் மும்மொழிக்கொள்கை வரும். இந்தியையும், சமஸ்கிருதத்தையும் குறுக்கு வழியில் தமிழ்நாட்டிற்குள் திணிக்கப் பார்ப்பார்கள், இவையெல்லாம் திரும்பி நடக்காமல் இருக்க வேண்டுமென்றால், மீண்டும் நம் கழக ஆட்சி அமைய வேண்டும் என்று அடுத்த ஆறு மாதம் நாம் களத்தில் இறங்கி, தேர்தல் பணியை நாம் ஆற்ற வேண்டும்.

இதே உறுதியுடன் அடுத்த 6 மாதம் நாம் களத்தில் இறங்கி பணியாற்ற வேண்டும். நம் அணி குறைந்தது 200 தொகுதிகளில் வெற்றிப்பெறும் என்று இலக்கை நம் தலைவர் அவர்கள் கொடுத்து இருக்கிறார். நாம் அனைவரும் களத்தில் இறங்கி, மக்களைச் சந்தித்தோம் என்றால், 200 தொகுதிகள் இல்லை, 200-க்கும் அதிகமான தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக வெற்றிபெறும். இந்த உறுதிமொழியை ஏற்று, இன்று முதல் செயலாற்றுங்கள்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், நகர கழகச் செயலாளர்கள் சண்முகம், எம்.கே.டி.கார்த்திக், நரேந்திரன், வினோத், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.டி.லோகநாதன், சந்தானம், வினோத்குமார், சமூக வலைதள பயிற்சியாளர் விக்னேஷ் ஆனந்த், அன்பகம் செந்தில், முத்து பகவத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் தையூர் விஜயகுமார், கமலக்கண்ணன், மணிகண்டன், இராமமூர்த்தி, ஜானகிராமன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்யபிரபு, துணை அமைப்பாளர்கள் பிரபு, கார்த்தி, ராஜேஷ், இன்சமாம், சிவசுப்பு, நகர அமைப்பாளர்கள் கார்த்திக், சந்தோஷ், மகேஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் இளங்கோவன், ரத்தீஷ் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.